தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 122

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

| சந்தா விபரம் | |
|---|---|
| உள்நாடு (இலங்கை உட்பட) | |
| ஆண்டு | ரூ. 24—0—0 |
| 6 மாதம் | ரூ. 12—0—0 |
| 3 மாதம் | ரூ. 6—0—0 |
| வெளிநாடு : | |
| ஆண்டு | ரூ. 30—0—0 |
| 6 மாதம் | ரூ. 15—0—0 |
| 3 மாதம் | ரூ. 7—8—0 |

சென்னை : ஐப்பசி 18உ செவ்வாய் (3—11—53) ☆ ☆ ☆ வெளியூர் : ஐப்பசி 19உ புதன் (4—11—53)


# காங். சட்டசபை உறுப்பினர்களே சி. ஆர். முதல் எதிரி!

## பம்பாய் பிரதமர் மொரார்ஜிக்கு ஒரு நியாயம்! சென்னைப்பிரதமர் ஆச்சாரியாருக்கு ஒரு நியாயமா?

## 'ஆடு-ஓநாய்' என்று ஆச்சாரியார் கூறுவது அவர் மனநிலையை வெளிப்படுத்திவிட்டது

### 'ஜனநாயகத்தின் பரம வைரி ஆச்சாரியார்' என்ற உறுப்பினரின் உள்ளக்கிடக்கை!

—இவ்வாறு சென்னை முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார், தென்காசியில் பேசிய பேச்சு பற்றி, அவரை எதிர்த்து நேருவுக்கு அனுப்பப்பட்ட மனுவில் கையொழுத்திட்ட சட்ட சபை உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது:—

"ஆச்சாரியார் தொடர்ந்து சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராக இருப்பதைப் பலர் மறுப்பதன் காரணம், அவர் தேர்தலில் நின்று சட்டப்படி வெற்றி பெற்றுத் தலைவராக இயங்கத் தயங்குகிறார் என்பதால் அல்ல.

(4 ம் பக்கம் பார்க்க)

"ஒரு தலைவர்—அவர் உலகப் புகழ் பெற்றவராகவோ, மகா திறமைசாலியாகவோ, நுண்ணறிவு படைத்தவராகவோ இருக்கலாம். அவர் ஒரு கட்சியின் முத்திரையைப் பெற்றுக் கட்சியினருக்கும், கட்சிக் கொள்கைகளுக்கும் அப்பால் உட்கார்ந்துகொண்டு, தமது கட்சியைச் சேர்ந்த, ஆனால் தமக்குப் பிடிக்காத நபர்கள் மீது குறை கூறுவதையே குறிப்பாகக் கொண்டிருப்பது நல்லதல்ல—இதை ஜனநாயக விதி அனுமதிக்கவும் மாட்டாது."

"ஜனநாயக அமைப்புக்கு எவரும் சாசுவதமானவரல்ல ஸீசர் போன்ற சர்வாதிகாரிகள் ஜனநாயக அமைப்பிற்கு மாறானவர்கள் மட்டுமல்ல; அவர்கள் ஜனநாயகத்தினால் ஒதுக்கப்பட்டவர்களும் கூட."

"ஜனநாயகத்தை நம்பாதவர்களிடமிருந்து, ஜனநாயகத்துக்கு முளைக்கும் ஆபத்து கொஞ்சம்தான். ஆனால் ஜனநாயகத்தை நம்புவதாகச் சொல்லிக்கொண்டு ஜனநாயக விதி முறைகளைப் பாளம் பாளமாகப் பிளந்து விளக்கம் கூறுவோர்தான், ஜனநாயகத்தைப் பின்னணியில் நின்று சாய்த்துச் சவமாக்கியும் விடுவோர்கள்."

"உண்மையில் நேரு ஜனநாயகவாதி. இவர், ஒரு நியமன உறுப்பினர். ஒரு அரசாங்கத் தலைவராக இருப்பது ஜனநாயகப்படி சரிதான் எனக் கூறுவது ஜனநாயக முறைக்கே முரண். நேரு அவ்வாறு கூறி இருக்கக்கூடாதென்றே ஜனநாயக விதிப்படி நான் கருதுகிறேன்."

"மொரார்ஜி தேசாய் பொதுத் தேர்தலில் தோற்றுவிட்டார். ஆயினும் அவர், மேல் சபைக்கு நியமனம் பெற்று பம்பாய்த் தலைமை அமைச்சர் பொறுப்பை ஏற்றார்."

"அந்தச் சமயத்தில் மொரார்ஜி தேசாய் தொடர்ந்து தலைமை அமைச்சராக இருக்கவேண்டுமானால், 6 மாதங்களில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுவிட வேண்டும். அங்கிலையில் தமக்கு எவ்வித மறுப்புமில்லை என்று நேரு கூறிவிட்டார். அதன்படி 6 மாதங்களில் ஒரு தொகுதியில் போட்டியிட்டு, வென்று, மொரார்ஜி தமது தலைமைக்கு தொடர்ச்சி கொடுத்துக்கொண்டார். இது நடப்பு. இதே நடப்புதான் எங்கும் நடந்திருக்க வேண்டும். அதுதான் முறை. ஆனால் மொரார்ஜிக்கு விதித்த சட்டம், ராஜாஜி விடயத்தில் புறக்கணிக்கப்படுவானேன்? இந்த இடம்தான் விளங்கவில்லை."

"பம்பாய் மொரார்ஜி விடயமாய் கூறிய மாதிரியே ஆச்சாரியார் விடயத்திலும் நேரு, அன்று விளக்கமாகவும் நிச்சயமாகவும் எழுதியிருந்தார். ஆனால், ஆச்சாரியார் 6 மாதங்கழித்து முறைப்படி நடத்த வேண்டிய தேர்தலை மறுத்துவிட்டார்."

"ஆச்சாரியார் நல்ல அறிவாளி—ஐயமே இல்லை; தேர்ச்சி பெற்ற திறமைசாலி—மறுக்கவே முடியாது. ஆனால், அவர் தென்காசியில் அவருடைய தலைமைக்கு எதிர்ப்பாக மனுப்போட்டவர்களைப் பொறாமைக்காரர்கள் என்று அறிக்கையிட்டது அடாதது மட்டுமல்ல, அநியாயமுங்கூட. ஆச்சாரியார் போன்ற பெரிய மனிதர்களுக்கு அந்த அறிவிப்பு அழகுமல்ல.

"தென்காசியில் தாம் செய்த அமைச்சரவை விரிவு பற்றிக் குறிப்பிடுகையில், 'ஆட்டு மந்தைக்குள் ஓநாய்களை அனுமதிக்க முடியுமா?' என்று, ஆச்சாரியார் கூறியிருக்கிறார். இது, அவருடைய மன நிலைமையை நன்கு வெளிப்படுத்தி விட்டது."

"தமது சகாவினர்களை ஆடுகளாகவும், தம்மை அந்த ஆடுகளை மேய்ப்பவராகவும் ஆச்சாரியார் கருதிக்கொள்ளமட்டும் இல்லை—நிச்சயித்துக்கொண்டும் இருக்கிறார். ஆகவேதான், தமக்கு எதிராக ஆடு மேய்ப்பவர் உண்டாவதை அவரால் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை."

***

## தூத்துக்குடி சதி வழக்கை விசாரிக்க தனி நீதி மன்றம்

### கட்டளையை சர்க்கார் பிறப்பித்து விட்டது

திருநெல்வேலி, நவ. 2—

தூத்துக்குடி சதி வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ள நமது தி. மு. கழகத் தோழர்கள் 96 நபர்களையும், விசாரிப்பதற்கென்று தனிமையில் ஒரு முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தை உருவாக்க, சர்க்கார் கட்டளை பிறப்பித்து விட்டது. மூன்று மாதம் அந்தத் தனி நீதிமன்றம் இயங்கக்கூடும் என்று தெரிய வருகிறது.

வழக்கு மன்றம், திருநெல்வேலியில் நியமிக்கப்படும். அலுவலகமும், நீதிபதியின் பெயரும் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

***

★★★★★★★★★★★★

### கட்டுப்படுத்தா!

"...இவ்விஷயம் குறித்து, அரசாங்கம் இன்னும் ஆலோசிக்கவில்லை இது சென்னையின் தனித் திட்டம். நாம் தனிப்பட்ட முறையில் நமது கல்வி முறைபற்றி ஆராய வேண்டும். மற்ற திட்டங்களும், முன்னிருந்த முறைகளும் நம்மைக் கட்டுப்படுத்த மாட்டாது,"

என்று, ஆந்திர முதலமைச்சர் டி. பிரகாசம் சென்னையின் புதிய கல்வித் திட்டம் பற்றி பத்திரிகையாளர் கூட்டத்தில் கூறினார்.

—'தமிழ் நாடு' 3—11—'53.

★★★★★★★★★★★★

***

### கல்லக்குடி அறப்போர்

★

இன்று

113-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

★

இன்று

112-வது நாள்

***

## சீப்பு, சோப்பு, கண்ணாடி கொண்டுவந்தனர் தொடக்கத்தில் பிரிட்டிஷார்!

### பின்னர் அரசியல் அதிகாரம்பெற்றனர்! உரிமை விரும்பிகளைத் தூற்றினர்! துன்புறுத்தினர்!

### சென்னை கவர்னர் பிரகாசாவின் முன்னோர்கள் 200 ஆண்டுகட்குமுன் இங்கு வியாபாரத்துக்கு வந்தனர்

### அதைத் தொடர்ந்து பிரகாசா இப்பொழுது இங்கு கவர்னராக வந்துள்ளார்!

சென்னை, நவ. 3—

"இரண்டு நூற்றாண்டுகளுக்குமுன், என் முன்னோர்கள் சென்னையில் வியாபாரம் செய்தனர்; ஏராளமான இலாபம் சம்பாதித்தனர்; நிதி குவித்தனர்; சொந்த ஊர் சேர்ந்தனர்; பின்னர், இங்கு திரும்பவில்லை.

"இங்கு சம்பாதித்த திரவியத்தைக் கொண்டுதான் ஏழு தலைமுறைகளாக எங்கள் குடும்பம் சொகுசாக ஜீவித்து வந்திருக்கிறது. அதனால்தான், வியாபாரிகளிடம் நான் அபிமானத்துடன் பேசுகிறேன்.

"அன்று, என் முன்னோர்களுக்குக் கிடைத்த கொள்ளை இலாபம் உங்களுக்குக் கிடைக்காது. இன்றுள்ள சர்க்கார், அதற்கு அனுமதிப்பதில்லை. தவறிக் கிடைத்தாலும், மரண வரி மூலம் அது பறிக்கப்படும். பரம்பரையாக நாங்கள் அனுபவித்துவந்திருக்கும் சொத்து என்னவாகுமோ என, எனக்குக்கூட கவலையாக இருக்கிறது."

—இவ்வாறு, சென்னை கவர்னர் பிரகாசா, சென்னை அகில வணிகர் சங்கத்தின் 9-ம் ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

***

### மா.பொ.வேதாசலம் தண்டிக்கப்பட்டார்

43-வது வட்ட தி. மு. கழக சார்பில், 13—10—53ல், மீர்சாகிப்பேட்டையில் தடையை மீறி நடைபெற்ற கூட்டத்தில் பேசிய தற்காக தோழர் மா. பொ. வேதாசலத்திற்கு 41, 71-வது பிரிவுகளின்படி, ரூ. 40 அபராதமும் கட்டத் தவறினால் 19 நாட்கள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. தோழர் அபராதம் கட்ட மறுத்து மகிழ்ச்சியுடன் சிறை புகுந்தார்.

***

### உபாத்தியாயர்களுக்கு நலன் நிதி

60 பள்ளிகளைச் சேர்ந்த 2000 பேர் சேர்ந்திருக்கின்றனர்

சென்னை, நவ. 3—

தென்னிந்திய உபாத்தியாயர்கள் சங்கம் ஆரம்பித்துள்ள க்ஷேம நிதியில், இதுவரை 60 பள்ளிகளைச் சேர்ந்த 2,000 உபாத்தியாயர்கள் சேர்ந்திருக்கின்றனர்.

உபாத்தியாயர்களுக்குக் கஷ்ட காலத்தில் உதவவும், மரணமடைந்தால் விதவைக்கும், குழந்தைகளுக்கும் உதவவும் இந்நிதி உபயோகப்படும்.

## ஐவர் சிறையில்

இன்று

## 64-வது நாள்


# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை : 3—11—1953 செவ்வாய்


# சர்வாதிகார முனைப்பு!

இன்று ஏடு படிப்போர் நாளை பாராளுவோர் என்ற போக்குத்தான் உயர்ந்த வழியாகும். ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையில, இந்த அனுபவ உண்மைக்குத் துளியும் மதிப்புக் கிடையாது. தந்திக் கம்பியைத் துண்டித்தோர், தண்டவாளத்தைப் பெயர்த்தோர், புகைவண்டித் தொடர்களைக் கவிழ்த்தோர், அதிகாரிகளைத் தூற்றிப் பழித்தோர், சித்திரவதை செய்து கொன்றோர், இவ்வளவையும் செய்யத் தூண்டினோர், இவ்வளவும் தர்மம் என்று வாதிட்டோர், ஆகிய 'சிறந்த பண்பினரு'க்குத்தான் இத்துணைக் கண்டத்தில் கீர்த்தியும், கித்தாப்பும். இந்தச் சீற்றச் செயல்களை எல்லாம் சிறப்பித்துப் பேசாத நாக்கு உடன்பட மறுக்கும் மனம், ஒப்புக்கொள்ளாத நெஞ்சம் அனைத்தும் இருக்கத் தகுதியற்றது என்பது, கொண்ட லட்சியத்தைப்பெற பலாத்காரச் செயல்களையே நம்பி வாழும் 'நல்லவர்கள்' சிலரின் சித்தாந்தம்.

இலட்சியம் எவ்வளவு இன்றியமையாததாகவும், மதிக்கத் தகுந்ததாகவும் இருந்தபோதிலும், அதைப் பெற மேற்கொள்ளும் நடைமுறைகள் அனைத்திலும் அமைதி தேவை, அறநெறியைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும் என்று இடித்துக் கூறுவோர் அனைவரையும், 'வழுக்கி விழுந்தவர்கள்' என்றே இந்த வெறிச்செயல் விரும்பும் இயல்பினர் மாசு கற்பித்துக் கழறி வந்தனர். 'கேட்டுக் கொள்ளுகிறோம்—வேண்டிக் கொள்ளுகிறோம்' என்ற உள்ளத்தை உலகுக்கு உணர்த்தும் சொற்கள்கூட, இந்தத் திருக்கூட்டத்திற்கு ஒரு காலத்தில் எட்டிக் கசப்பாக இருந்து வந்தது.

ஒரு காலத்தில், இத்திருக்கூட்டம் புரட்சி என்ற சொல்லின் போலியாகச் செய்த புரட்டுக்கு, இன்று ஒன்றுக்குப் பல நூறாக விலை கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. வேதனையும், விவேகம் விலகிய கோபமும் கொப்பளித்துக் கொண்டு இவர்களின் முகங்களில் கோர நர்த்தனம் ஆடிக் கொண்டிருக்கிறது. இவர்களின் நெஞ்சோ, விரிவிலாதது! காட்டு நடைமுறையோ, எரிச்சலை மூட்டுகிறது! இரண்டும் ஒன்றாகப் பிணைந்து, இவர்கள் வாயிலிருந்து வசைச் சொற்களை வாந்தியாக எடுக்கச் செய்கிறது.

பண்டித நேரு பிறந்த மாநிலத்தில், நம்மைப்போல 'காட்டுமிராண்டிகள்' என்பவர் வாழாத நிலப்பரப்பில், சென்ற இரண்டு தினங்களாகக் கல்லூரி மாணவர்கள் போர்க்கோலம் பூண்டுள்ளனர். காங்கிரஸ் சர்க்காரும் பலப் பரீட்சையில் தீவிரமாக இறங்கியுள்ளது.

சர்க்காரின் அடக்குமுறை அம்புறாத்தூணியில், அதிகாரிகள் தொட்டதும் கையில் கிட்டுவது 144 என்கிற தடைச் சட்டம் தானே? மாணவர்கள் ஊர்வலம் செல்லக்கூடாது என்று, இச்சட்டத்தின் கீழ் தடை விதித்து சர்க்கார், மாணவர்களின் செயல் உணர்ச்சிக்குச் சவால் விடுத்தது. மாணவர்களும், தடை உத்தரவை மீறி ஊர்வலம் எடுத்துச் சென்றனர். தொடக்கத்தில் அமைதியாகத்தான் ஊர்வலத்தை மாணவர்கள் நடத்திச் சென்றனர். ஆனால், அதிகாரிகளா பார்த்துக்கொண்டு இருப்பர்? மாட்சிமை பொருந்திய ஜவகர்லால் சர்க்கார் நடைபெறுக வேண்டுமே! லக்னோ நகர மாணவர்கள் ஊர்வலத்தினால், நேரு ஆட்சிக்குத் தங்கு தடை ஏற்பட்டு விடும்படியாக விட்டுவிடலாமா? இது என்ன வெள்ளையன் ஆட்சியா? 'நம்மவர்' ஆட்சியிலுமா, நம்மவர் குறை காண்பது? சொட்டு சொல்லுவது? இன்று, நம்மவர் செய்ய வேண்டியது எல்லாம், ஆட்சி பீடத்தில் உள்ள 'நம்மவர்'களுக்கு அவர்கள் நாமத்தை எவராவது உச்சரிக்கக் கேட்டால்கூட, கேட்டுக் கொண்டிருக்கிற 'நம்மவர்கள்', உடனே கன்னத்தில் போட்டுக்கொண்டு, 'புத்தி', 'புத்தி' என்று சொல்லிக்கொள்ள வேண்டுவதுதானே முறை? இந்த நடைமுறையைத்தானே நமது 'நம்மவர்'களான காங்கிரஸ் ஆளவந்தார்கள், தம்மவர்களான நம்மவர்களிடம் எதிர்பார்க்கிறார்கள்?

பண்டிதர் முதல், பக்தவத்சலனார் வரையில் உள்ள ஆளவந்தார்களின் போக்கு, அவர்களை, 'நம்மவர்கள்' என்று எண்ணுகின்ற எண்ணத்தைக்கூட, நம அனைவரையும்விட்டு விரட்டி விடுகிறது. நாம் என்ன செய்ய முடியும்? ஆளவந்தார்கள், தங்களின் இன்றைய விரும்பத்தகாத நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ளுவதின்மூலம், 'நம்மவர்'களுக்கு நல்வழி காட்ட வேண்டுமேயல்லாது, துப்பாக்கியைக் கரம் பிடித்துச் சுடுத் தள்ளுவதினால், அது சாத்தியமாகுமா? நிற்க,

தருணத்தை எதிர்பார்த்துக் கிடக்கும் ஜமீன்தார்கள் சிலரும், சமூக விரோதிகள் சிலரும், மாணவர்களின் ஊர்வலத்தைத் தக்கநேரம் வாய்ப்பாகக் கொண்டனர்.

'அஞ்சல் நிலையங்களுக்குத் தீயிட்டனர்!'

'போலீசைத் தடிகொண்டு தாக்கினர்!'

'போலீஸ் துப்பாக்கிக் குண்டடியால் ஒரு மாணவர் இறந்தார்!'

'400 பேருக்குமேல் காயமுற்றனர்!'

'நூற்றுக்கணக்கானவர் சிறை பிடிக்கப்பட்டனர்!'

இப்படிச் செய்திகள் வருகின்றன. இன்னமும் நிலைமை சீராகவில்லை.

இந்தச் செய்திகேட்டு நேரு கோபிக்கிறார். பல்கலைக் கழகங்களையே மூடிவிடுவேன் என்று கர்ஜிக்கிறார்! கல்வி முறையையே தொலைத்து விடுவேன் என்று எச்சரிக்கை விடுகிறார்!

இவர் ஏதோ, இட்லர், முசோலினி போல பேசுகிறாரே அல்லாது, பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு கூடை உறுப்பினர்கள் கொண்ட பாராளு மன்றத்தினர், அரசியல் சட்டத்தை வழிகாட்டியாகக் கொண்டு, இடும் கட்டளையை நிறைவேற்ற, இருந்துவரும் ஒரு மனித இயந்திரம் தாம் என்ற நடைமுறை உண்மையே பண்டிதருக்குப் புரிந்திருப்பதாகக் காணோம்! இனியாவது புரிந்து கொள்ளுவாரா என்பதும சந்தேகமாகவே இருக்கிறது!

லக்னோ சம்பவம் வருந்தத்தக்கது, அந்தக் காட்டுமிராண்டித்தனம் கண்டிக்கத்தக்கது!

எல்லாவற்றிலும், நேருவின் சர்வாதிகார முனைப்பு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. உலகத்தவரால் எள்ளி நகையாடத்தக்கது!

## "ஆச்சாரியாருக்கு எதிர் முகாமில் 85 எம். எல். ஏ.-க்கள் என்பது உறுதி"

### ஆச்சாரியாரின் முன்னோடிகளுக்கு காமராசர் குழுவைச் சேர்ந்தவர் தாக்கீது!

மதுரை, நவ. 2—

ஆச்சாரியாரை வெளியேற்ற காமராசர் குழு செய்த முயற்சி தோல்வியடைந்ததாக ஆச்சாரியார் குழுவினர் கூறுவது தவறு என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. சென்னை சட்டசபையில் உள்ள 130 காங்கிரஸ் எம். எல். ஏ-க்களில் 85 பேரிடம் கையெழுத்து வாங்கித்தான் நேருவுக்கு அனுப்பப்பட்டதாக மேலூர் வட்டார எம். எல். ஏ., ஒருவர் கூறியிருக்கிறார் இதைப்போலவே திருச்சி காங்கிரஸ் எம். எல் ஏ, ஒருவர் கூறியிருக்கிறார். மேலும் அந்த திருச்சி எம் எல். ஏ., கூறுகையில் "என்னுடைய கையெழுத்து 57-வது கையெழுத்து. என்னிடம் கையொப்பம வாங்க வந்த ஜெயராம ரெட்டியார், எம். எல். ஏ.யும், டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி, எம் எல். சி யும், கோவை போவதாகவும் கூறினார்கள். ஆகவே, அவர்கள் 85 கையெழுத்து வாங்கிய பின்பே நேருவுக்கு அனுப்பியிருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இதற்கு முற்றிலும் மாறாக காமராசர் குழுவினரை 'புகார்வாலாக்கள்' என்று சோயாங்கா பத்திரிகை குறிப்பிட்டிருப்பது கண்டிக்கத்தக்கது. 30 பேருக்கு மேல், ஆச்சாரியாரை எதிர்க்கும் காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்கள் இல்லையென்றும் ஆச்சாரியார் கோஷ்டியினர் கூறுவது சுத்தப் பொய் என்றும் அவர் கூறினார்.

### அப்துல் கபார்கான் பிரச்சினை

ஐ. நா.—வுக்குப் போகுமா?

கல்கத்தா, நவ. 2—

"இந்தியா—பாகிஸ்தான் நெருக்கடிகள் தீர உள்ள ஒரே வழி, கான் அப்துல் கபார்கானை விடுதலை செய்வதே யாகும்", என்று, அகில இந்திய பக்தூன் ஜிர்கா தலைவர் அக்பர்கான் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:

"கபார்கானை விடுதலை செய்ய வேண்டும் என்று, பாகிஸ்தானிலிருந்து இதுவரை 16,000 கையெழுத்துக்கள் பெறப்பட்டுள்ளன. 20,00,000 கையெழுத்துக்கள் பெறப்பட்டவுடன், ஒரு சுயேச்சை நாட்டின் மூலம், ஐ. நா—விடம் இது சமர்ப்பிக்கப்படும்.

அதற்குள் கபார்கானை விடுதலை செய்யும் பிரச்சினைகளில் பாக்—பிரதமர் சிரத்தை காட்டுவார் என்றே நாங்கள் எதிர்பார்க்கிறோம். —நேபன்

### "விஞ்ஞான ரிஷிகள்" தேவை!

புதுடில்லி, நவ. 2—

இமய மலைச் சிகரங்களில் வாழ சில நபர்கள் தேவை; ஆனால், இவர்கள் பழங்கால ரிஷிகளைப் போல் உலகத்தைத் துறந்து, தவம் செய்யவேண்டியதில்லை. இவர்கள் இந்திய சர்க்காருடன் கம்பியில்லாத் தந்தி மூலம் தொடர்பு வைத்துக் கொள்ளலாம்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியக் கைத்தொழில், விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம் உலகத்தின் உயர்ந்த பகுதியான இமய மலையின் கால நிலை மற்றும் இதர விஷயங்கள் பற்றி ஆராய ஒரு இடம் தேடியது. இதுவரை யாரும் கிடைக்காததால் இவ்வேலைக்காக அனுப்பப்படவில்லை.

இப்போது இவ்வேலைக்கு மனு கோரப்படுமென்று தெரிகிறது.

### பர்மாவிடம் அரிசி இருப்பு அதிகரிக்கிறது

பம்பாய், நவ. 3—

தன் பொருள்களுக்கு அயல் நாடுகளில் மார்க்கெட்டுகளைப் பெற நான்கு பர்மியத் தூதுக் குழுவினரை பர்மா சர்க்கார் கிழக்கு நாடுகளுக்கு அனுப்பியுள்ளது.

"1954ல், பர்மாவில் ஏற்றுமதிக்கு ஏராளமான அரிசி இருக்கும் என்றும், 15,00,000 டன் அரிசி ஏற்றுமதிக்கு ஒதுக்கப்படும்" என்றும் அக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

போர்த்துகீசிய கோவா, அடுத்த ஆண்டில், சுமார் 20,000 டன் அரிசியை வாங்கும் என்றும் அவர் தெரிவித்தார். —நேபன்

### கொள்ளைக்காரன் பூபத்!

கராச்சி, நவ. 3—

சிந்து சர்க்காரால் கொள்ளைக்காரன் எனவும், ஆபத்தான ஆசாமி என்றும் கருதப்படும் பூபத், இப்போது விடுதலை கோரி 'ஹேபியஸ் கார்பஸ்' மனு செய்து கொண்டிருக்கிறார். இவர், தன்னை 'இந்தியாவின் வைரி' என்றும், 'பாகிஸ்தானின் விசுவாசி' என்றும் சொல்லிக்கொள்கிறார்.

### எதிரொலியா?

பம்பாய், நவ. 3—

கப்பல் தொழிலாளர்களை வேலைக்கு எடுப்பதில், லஞ்சமும் ஊழலும் தாண்டவமாடுகிறதென்று இலங்கையில் நடைபெற்ற ஆசிய கப்பலோட்டிகள் மாநாட்டில் புகார் செய்யப்பட்டதையொட்டி, பம்பாயில், ஒரு வேலை தேடித் தரும் நிலயத்தை திறக்க சர்க்கார் தீர்மானித்திருக்கிறது. இதுபற்றி, நவ. 13-ல் புதுடில்லியில், சர்க்கார், கப்பல் சொந்தக்காரர்கள், தொழிலாளர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்படும்.

### வெண் காகம்!

★

திருப்பூர், நவ. 2—

காகம் கருப்பு நிறம்தான்; ஆனால் திருப்பூர் தாலுகாவிலுள்ள ராசிபாளையம் என்னும் கிராமத்தில் ஒரு கிராமவாசி, பத்து தினங்களுக்கு முன்னால், இறக்கை, உடல் எல்லாம் வெண்மை நிறமான காக்கை ஒன்றைப் பிடித்து அதைக் கூட்டிலடைத்து பத்திரம் செய்து வைத்தார். இதைப் பார்க்கப் பக்கத்து கிராமங்களிலிருந்தெல்லாம் மக்கள் திரள், திரளாக வந்து சென்றனர். அந்த காகம் கருப்புக் காகங்கள் போலவே கரைந்ததாம். எதிர்பாராதவகையில் அந்தக் காகம் கூண்டிலேயே இறந்துவிட்டது எனக் கூறப்படுகிறது

### டில்லியில் முடியாதாம்!

பம்பாய், நவ. 3—

மதுவிலக்கு விஷயமாக டில்லி ராஜ்யம் இன்னும் தீர்மானிக்கவில்லை என்றும், டில்லி, இந்தியாவின் தலைநகரமாக இருப்பதால் அயல்நாட்டு ஸ்தானிகாலயங்கள் இருக்கின்றனவென்றும், இதன் காரணமாக மதுவிலக்கு சாத்தியமாக இராதென்றும் டில்லி சட்ட சபை காங்கிரஸ் மெம்பர் ஒருவர் கூறியுள்ளார்.

### 24 மணி நேரத்தில் 11 காலன் பால்!

லண்டன், நவ. 3—

நார்விச்சிலுள்ள பிரிஷியன் பசு ஒன்று, 24 மணி நேரத்தில், மூன்று முறை விட்டு விட்டு கறந்ததில், 11 காலன் பால் கொடுத்துள்ளது. இது ஒரு ரிகார்ட் ஆகும்.

### மனைவிமீது புகார்செய்த கணவனுக்கு அபராதம்

கோலாலம்பூர், நவ. 2—

தன் மனைவி கம்யூனிஸ்டு அனுதாபி என்று போலீசாருக்குப் பொய்த் தகவல் அளித்த கணவனுக்கு, பெண்டாங் செஷன்ஸ் கோர்ட்டால் ரூ 750 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. விசாரணையின்போது, தன்னிடம் பிறர் சொல்லித் தெரிந்த விவரத்தைப் போலீசுக்குத் தெரியப்படுத்தியதாக கணவன் கூறினாரும்.

### 3-லட்சம் போர் வீரரை இழந்த தளபதி திரும்புகிறார்!

பெர்லின், அக். 31—

இரண்டாவது உலக யுத்தத்தில் ஸ்டாலின்கிராடில், 3,00,000 பேர் கொண்ட இராணுவத்தை இழந்த பிரபல ஜெர்மன் போர் வீரரான பீல்ட் மார்ஷல் வான் பாலஸ் ஜெர்மனிக்கு மீண்டும் திரும்பிவிட்டதாகக் கூறப்படுகிறது.

### அனுதாபங்கள்

★

தேவபாண்டலம் தி. மு. கழகத் தோழர் ஆமத் சரீப் அவர்கள் 25—10—53 இரவு 10-30-மணிக்கு இயற்கை யெய்திவிட்டதறிந்து, அன்னார் குடும்பத்தாருக்கும், அவரது பிரிவாற்றாமையால் வாடும் தோழர்களுக்கும் தேவபாண்டலம் தி. மு. கழக சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோமென செயலாளர் நாச்சியப்பன் அறிவிக்கிறார்.

* * *

வண்ணை (2-வது வட்டம்) தி. மு. கழக உறுப்பினர் தோழர் புதுவை தில்லை. ஆ. பாரி அவர்கள் தங்கையார், 24—10—53 பகல் இயற்கை யெய்தியமை கேட்டு வருந்துகிறோம். அன்னார் குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# காங்கிரஸ் கட்சியினரின் உள்ளெண்ணங்கள் படம் பிடிக்கப்படுகிறது

## ஆச்சாரியாரை விரட்ட விரும்புகிறவர்கள் வெறும் சுயநலமிகளாம்! பதவிவேட்டைக்காரர்களாம்!

### விஷயத்தைபுரிந்துகொள்ளமுடியாத விவேகமற்றவர்கள் சொந்தக் கட்சியினா என்கிறார் ஆச்சாரியார்

சேர்ந்தும் 'கடவுள் அருளால்' தேசத்தின் அமைதியை நிலை நிறுத்தியிருக்கிறோம். மாநிலத்தின் நலன் கருதி பொதுமக்களின் நிதான புத்தி காங்கிரஸ் கொள்கைகளை சீர்குலைக்கும் இப்பேர்ப்பட்ட பிற்போக்கிற்கு இடமளிக்காதிருக்க வேண்டும்."

### உயிருள்ளவரை அதிகாரத்தை விட முடியாது என்று கூறுகிறார்!

"சிலர் என்ன ஆசைப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். பதவி, தயவு, தாட்சண்ய விநியோகத்தில் நான் உதவ வேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். அது சாத்தியமில்லாவிடில் இந்த நோக்கத்துடன், நிலையான அரசாங்க அதிகாரிகளைக் கண்டு தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கவாவது வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள். இவ்விரண்டிற்கும் நான் சம்மதிக்கப்போவதில்லை. ஆகவே, நான் வெளியேறிவிட வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள்."

"ஒரு கட்சி அதிகாரத்தில் இருப்பதன் பயனாக, அந்தக் கட்சி உறுப்பினர்களுக்குச் சவுகரியங்கள் ஏற்படவில்லையானால், கட்சி தோரணை அரசாங்க முறையை அவர்கள் புரிந்துகொள்வது கடினமாக இருக்கிறது."

"அதிகாரத்தில் இருப்பதினால் சொந்த லாபத்தைத் தேட ஆசை ஏற்படுவது ஒருபுறமிருக்க, நம் தென்னிந்தியாவில் அழிவுற்ற ஜாதிமுறை ஒரு சிர்கேடாக இருக்கிறது."

"ஜாதியின் பெயரால் புதிய சலுகைகள் தங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். வசதிகள் குறைந்த சில ஜாதியினருக்குச் சலுகைகள் காட்டவேண்டுமென்று அரசியல் சட்டம் கூறுகிறது, மற்றபடி பதவி, அல்லது அதிகாரத்தை வகுப்பு தோரணையில் பிரித்துக் கொடுப்பதை அரசியல் சட்டம் அனுமதிக்கவில்லை. இதைத்தான் காங்கிரசிலுள்ள நண்பர்கள் உணரவில்லை வகுப்புவாதக் கொள்கையை நிலை நிறுத்தி, அமுல் நடத்த இவர்கள் பிரியப்படுகிறார்கள். வகுப்பு தோரணையில் அதிகாரம், சலுகைகள் பங்கு போடப்பட வேண்டுமென்றால், இதனால் பெரிதும் எதிர்பார்ப்பவர்கள் கூட முடிவில் ஏமாற்றமும், மனச்சோர்வும் அடையக்கூடும். இத்தகைய வகுப்பு, உள்வகுப்பு அல்லது பிற்போக்கு எண்ணங்களிலிருந்து விடுபட்ட கொள்கையையே காங்கிரஸ் ஆதரிக்கிறது."

"மதுவிலக்கு, பெண்கள் நலன் ஆகிய இலாகாக்களை நிர்வகிக்க ஒரு அரிஜனப் பெண்ணை மந்திரிசபைக்கு நியமித்ததை; சுயநலம், சொந்த ஆசை காரணமாக எதிர்த்ததை கண்டு நான் மிகத் துக்கிக்கிறேன். ஆனால் இது தற்காலிக எதிர்ப்புத்தான். என்னை, அரசாங்கத்தை விட்டு அகற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் அக்கரையுள்ள ஒரு சிலரால் கிளப்பப்பட்ட எதிப்புத்தான் அது."

"குறிப்பிட்ட ஜாதியினருக்கு என்று, சலுகை அளிப்பது நல்லது என்ற குறுகிய மனப்பான்மையுடையவர்களுக்கு தோன்றினாலும் அதனால் விரைவில சீரழிவு ஏற்பட்டு நிர்வாகமுறை தகர்ந்துவிடும்."

—இவ்வாறு, சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அறிக்கையில் ஆச்சாரியார் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"நான், சென்ற வாரம், சென்னையை விட்டு வெளியே சென்றிருந்தபோது, என்மீது, ஒருசில எம். எல். ஏ.-க்கள் புகார் செய்து எழுதியதாகப் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. காங்கிரஸ் தலைவர் உடனேயே இத்தகாரரைத் தீர்த்துக்கட்டியதுகுறித்து, நான், அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் வரதராஜுலு நாயுடுவைப் பற்றி அனைவருக்கும் தெரியும். அவரது குறைகளும், நலன்களும் நமக்கெல்லாம தெரிந்ததுதான். ஆனால், அவர் இந்த தவறில் முக்கிய புருஷராக இருப்பாரென்று நான எதிர்பார்க்கவில்லை. மேலெழுந்தவாரியாகக் காணப்படும் தோற்றத்தை நான் இங்கு கூறவில்லை. உள்ளேயும் நிலைமைகளைப் பற்றியே நான் கூற விரும்புகிறேன.

எனக்கு உயிருள்ள வரை, சக்தியுள்ளமட்டும், நான் பதவியிலிருந்தாலும், இல்லாவிட்டாலும், நமது ஜனநாயகத்தில் பதவிப் பங்கு போட்டுக்கொள்ளும் முறையை நான் எதிர்த்தே தீருவேன். நமது அரசியல் சட்டம் கருத்திலும், எழுத்திலும் இத்தகைய உணர்ச்சியைத் தடுக்கிறது.

எதேச்சாதிகாரமில்லாத நல்ல ஜனநாயகம் இயங்க வேண்டுமானால், லாபத்தைப் பகிர்ந்துகொள்ளும் முறையை அறவே ஒதுக்கிததானாக வேண்டும். 'லாபத்தில் பங்கு' என்ற முறை எங்கெங்கு நிலவுகிறதோ அங்கெல்லாம் அநீதிதான் பரவிக் கிடக்கிறது நம் நாட்டில் அதிகாரத்திற்கு வந்த ஒரு சிலர் இம்முறையைக் கையாண்டதால் அதிகாரத்திலிருந்த அக்கட்சி பொதுமக்களின் அன்பை இழக்க நேரிட்டிருக்கிறது. கட்சிகளுக்குள் பிளவேற்பட்டால், தேர்தலில் அக்கட்சிகளுக்கு விபரீதம் ஏற்படத்தான் செய்யும்.

அரசியல் சட்டக் கருத்துக்கு முரணாக இத்தகைய பிற்போக்கு முறைகளைக் கையாள விரும்பும் சில காங்கிரஸ்காரர்கள் காட்டிற்கும், காங்கிரசிற்கும் தீங்கிழைத்து வருகிறார்கள். கஷ்டப்பட்டுச் சுதந்திரத்தைப் பெற்றிருக்கிறோம். பல கஷ்டங்கள்

## சூளை தி. மு. கழக தோழர்களுக்கு

சென்னை, நவ. 3—

6—11—53 வெள்ளி மாலை 6 மணியளவில், 31, கலியாண மேஸ்திரி தோட்டம் இல்லத்தில் "தூத்துக்குடி வாரம்" நடத்தப்படும். எல்லா கழகத் தோழர்களும் இதையே அழைப்பாக ஏற்று கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன் என்று, செயலாளர் சு. பாலன் அறிவித்துக்கொள்கிறார்.

## பாலதண்டாயுதம், மீனாட்சிநாதனுக்கு ஆயுள் தண்டனை

பாளையங்கோட்டை, நவ. 2—

திருநெல்வேலி இரண்டாவது சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த தோழர்கள் கே.பாலதண்டாயுதம், வி. வி. மீனாட்சிநாதன் ஆகியோருக்கு ஆயுள் தண்டனையும், பில்வான் அருணாசலத்திற்கு 4 ஆண்டு கடுங்காவல் தண்டனையும் விதித்து, திருநெல்வேலி அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி பி. எஸ். கேசவன் நம்பூதிரி தீர்ப்பளித்தார்.

# ஆச்சாரியார் நடைமுறைக்குக் கண்டனத்தின்மேல் கண்டனம்

—— (:) ——

## தி. மு. கழகத்தின் மீதுள்ள வழக்குகளை வாபஸ் வாங்க கோரிக்கை

### தோழர் கே. எம். வல்லத்தரசு முழக்கம்

புதுக்கோட்டை, நவ. 2—

1—11—53-ல், திலகர் திடலில் தேசிய மத்திய சங்கத்தின் ஆதரவில்நடந்த பொது கூட்டத்தில், பாராளுமன்ற தோழர் க. மு. வல்லத்தரசு, பி.ஏ., பி.எல்., பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"காங்கிரஸ்காரர்கள், அன்று, டில்லிக்கு வெள்ளையன் ஒருவன் வந்தபோது, கருப்புக்கொடி பிடித்து, 'வெள்ளையனே, வெளியேபோ" என்று தங்களின் அதிருப்தியைக் காண்பித்தார்கள் அதேபோல், நேரு சென்னைக்கு வந்தபோது, தங்களின் அதிருப்தியை, கருப்புக்கொடி காட்டி தெரிவித்த தி. மு. கழகத்தாரை, ஒழித்துக்கட்டிவிடுகிறேன் என்று, தலைமை அமைச்சர் ஆச்சாரியார் பேசியது மிகமிகத் தவறு.

காங்கிரசுக்காரர்கள் ரயில்களை அன்று நிறுத்தி, வெள்ளையன் ஆட்சியில் தங்களின் அதிருப்தியைத் தெரிவித்தார்கள்; அதேபோல், இன்று தி. மு. கழகம், தன்னுடைய அதிருப்தியைத் தெரிவிக்க ரயிலை நிறுத்தியதற்காக, 'தற்கொலை செய்ய முயற்சித்தார்கள்,' என்று பலவாறாக, பல செக்ஷன்களை ஜோடித்து, வழக்கு போட்டு தண்டித்துக்கொண்டிருப்பது நல்லதல்ல. தி. மு. கழகத்தாரின் மேலுள்ள வழக்குகளை, வாபஸ் வாங்க வேண்டியதுதான் நீதியும், நியாயமுமாகும் என்பது, என் அபிப்பிராயம்.

"புதிய கல்வித் திட்டம், கழுவடையான திட்டமேயாகும். ஆச்சாரியார் கொண்டுவரும் ஒவ்வொரு திட்டத்தையும், சட்டசபையைக் கலந்தாலோசிக்காமல், தானே கொண்டுவருவது கண்டிக்கத் தக்கதுமாகும்."

அவர் மேலும் பேசுகையில், "வடநாட்டில் இந்துமகா சபையார் கிளர்ச்சிகள் செய்து ஆர்ப்பாட்டங்கள் செய்யும் போது, அங்கு, போலீசார் தடியடி, கண்ணீர்ப்புகைகளை உபயோகித்து, கூட்டத்தைக் கலைத்துவிடுகிறார்கள்,' அங்கு, துப்பாக்கியால் சுட்டதை நான் பார்க்கவேயில்லை; சுடவும் இல்லை. ஆனால், இந்த தி. மு கழகம் ஏதோ ஓர் கிளர்ச்சி செய்து, ஆர்ப்பாட்டங்கள் செய்ததற்காக மனிதர்களை மாடு என்று நினைத்து சுட்டுத் தள்ளியது வருந்தத் தக்கதாகும. 'சுட்டதை நான் மிக வன்மையாகக் கண்டிக்கிறேன்' என்று கூறினர்.

## 42-வது வட்டத் தோழருக்கு ஒரு மாதம் சிறை

### தடை மீறியதற்குத் தண்டனை

17—9—53 அன்று சென்னை திருவல்லிக்கேணியில் (42-வது வட்டம்) தி. மு கழகத் தோழர்களால் தடைமீறி கண்டனக் கூட்டமும், ஊர்வலமும் நடத்தியதாக போலீஸாரால் கைது செய்யப்பட்ட தோழர்களான பூ. அரங்கசாமி, பெ. திராவிடமுத்து, மா. செ. வெண்முகில், கரிகாலன், க. பாண்டியன், க. வெங்கிடேசன், இளம்பரிதி, கே வடிவேலு, முனுசாமி, எம் எ. உசேன் ஆகியோரின் வழக்கு 20—10—53 அன்று எழும்பூர் முதல் மாகாண மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டது

7 தோழர்கள் மட்டும் கோர்ட்டுக்கு வந்திருந்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி அவர்கள், தோழர் க. வெங்கிடேசன் அவர்களுக்கு ஒரு மாதம் கடுங்காவல் தண்டனை விதித்தார். தோழர் க. வெங்கிடேசன் அவர்கள் மகிழ்ச்சியுடன் சிறை புகுந்தார். மற்ற 9 தோழர்களின் வழக்கு 9—11—53-க்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

## 'நம் நாடு' ஏஜெண்டு தோழர்களுக்கு

"நம் நாடு" வெளியூர் ஏஜெண்டுத் தோழர்கட்கு: அக்டோபர் மாதத்திய பில்கள் 31—10—53, 1—11—53-ம் தேதிகளில் அனுப்பியுள்ளோம். பழைய, முன்பில் பாக்கிகளையும் குறிப்பிட்டுள்ளோம். எல்லாப் பாக்கித் தொகைகளையும் இங்கு 10—11—53-ம் தேதிக்குள் கிடைக்கும்படி அவசியம் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். டிபாசிட் தொகைக்கு மேல் பாக்கியுள்ள தோழர்கட்கு "நம் நாடு" அனுப்புவது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. "நம் நாடு" பத்திரிகை அனுப்புவது நிறுத்தப்பட்டும், கடிதங்கள் எழுதியும் பாக்கி தொகை அனுப்பாமலிருக்கும் தோழர்களின் பெயர், வரிசையாக "நம் நாடு"வில் தொடர்ந்து வெளியிடப்படும். வெளியூர் தி. மு கழகம் (கிளை)களிலுள்ள தோழர்கள், ஏஜென்சி பாக்கியை அனுப்பி வைக்கத் துணைபுரிய வேண்டுகிறோம் எல்லா ஊர்களிலும் ஏஜென்டுகளிடம் 'நம் நாடு' வாங்கிப் பாக்கியுள்ள தோழர்களும் இனியும் தாமதியாமல் பாக்கி ரூபாயைக் கொடுத்து தி. மு. கழகத் தின இதழ், 'நம் நாடு'வை ஆதரிக்க வேண்டுகின்றோம். ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களில் நம் தோழர்கள், சந்தா தொகை அனுப்பி, "நம் நாடு" தபாலில் பெற்றுக் கொள்ள வேண்டுகின்றோம்.

இராயபுரம்,
சென்னை
2—11—53

பொறுப்பாளர்
"நம் நாடு"


வெளிவந்துவிட்டது!

தி. மு. கழகத் தலைவர்கள் ஐவரின் நீதிமன்ற வாக்குமூலங்கள்

# THE ANSWER

[ஆங்கிலம்]

விலை: 0—6—0 தபாலில் அனுப்ப 0—7—0

கிடைக்குமிடங்கள்:

(1) தி. மு. க. தலைமை நிலையம், 'அறிவகம்,' சென்னை-13

(2) பத்மா பிரஸ், காஞ்சீபுரம்.

★

குறிப்பு:—ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகள் வேண்டுவோர், காஞ்சீபுரம், பத்மா பிரசுக்கே எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

## "தூத்துக்குடி நாள்" கூட்டம்

சென்னை, நவ. 2—

1-11-53 ஞாயிற்றுக்கிழமை காலையில், 43-வது வட்ட தி.மு. கழகசார்பில் மீர்சாகிப்பேட்டை வள்ளுவர் வாசகசாலையில் தோழர் இளம்பரிதி தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம், "தூத்துக்குடி சதி வழக்கும், நமது கடமையும்" என்பதுபற்றி தோழர்கள், கோ. இளவரசு, பொ. தாமோதரன், இராசாபாபர், வெ. கி. பார்த்தசாரதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

"தூத்துக்குடியில் 93 திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள்மீது பலவிதமான குற்றங்களைச் சுமத்தி, அநீதியான முறையிலே சதிவழக்கு ஒன்றை சர்க்கார் தொடுத்திருப்பதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதோடு, உடனடியாக அச்சதிவழக்கை சென்னை சர்க்கார் வாபஸ்பெற்று, அத்தோழர்கள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டும் என்று இக்கூட்டம் சென்னை சர்க்காரை வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறது," என்ற தீர்மானம், கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தோழர் மு. புரட்சிமணி நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

### தூத்துக்குடி வாரமும் பாராட்டுக் கூட்டமும்

காஞ்சிபுரம், நவ. 2—

தூத்துக்குடி வாரமும் சிறை சென்ற தோழர்களான ஏ.பாஸ்கரன், அ. சுப்ரமணியம், இராசு ஆகியோருக்குப் பாராட்டுக் கூட்டமும், காஞ்சி நகர தி.மு. கழகம் பிள்ளையார் பாளையம்—புதுப் பாளையத் தெரு தி.மு. கழகம் ஆசிரியவைசனின் சார்பில் புதுப் பாளையத் தெருவில் தோழர் சி. எ. பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறைசென்ற தோழர்களுக்கு மலர்மாலைகளும், வாழ்த்துரையும் வாசித்தளிக்கப்பட்டது. தோழர்கள் சி. எஸ். பாலன், சி. வி. எம். அண்ணாமலை, காஞ்சி கல்யாணசுந்தரம், மு. சவுந்திரபாண்டியன் ஆகியோர் ஆட்சியாளரின் போக்கைக் கண்டித்தும், தூத்துக்குடி வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள தோழர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று வற்புறுத்தியும் பேசினர்.

தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்ய வேண்டுமென்ற தீர்மானம் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. 1000-க்கு மேற்பட்ட கையொப்பங்களை, ஆச்சாரியாருக்கு அனுப்புவதற்காகப் பொதுக்கூட்டத்தில் வாங்கப்பட்டது, என்று நகரச் செயலாளர் இரா. வெங்கடேசன் அறிவிக்கிறார்.

### காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு?

மங்களூர், நவ. 1—

"எம்மதமும் சம்மதமே என்றிருக்கும் நாடு, உலகத்திலேயே, இந்தியா ஒன்று தான்."

"எல்லா மதத்தினரும் தங்கள், தங்களுடைய மதங்களைப் பின்பற்ற இந்திய அரசியல் அமைப்பு இடமளிக்கிறது. உலகத்திலேயே உன்னதமான அரசியல் அமைப்பு இந்தியாவினுடையதுதான். அதைப் பாதுகாக்க வேண்டியது மாணவர்களின் கடமை,"

—இவ்வாறு, இந்திய அரசாங்க உள்நாட்டு அமைச்சர் டாக்டர் கைலாசநாத் கட்ஜு, இங்கு, அர்ச் அலாய்சியஸ் கல்லூரி மாணவர்கள் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

# காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கட்சிக் கொள்கைகளை வகுப்பதில், கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களைக் கலந்தாலோசிக்காமல், தன் மூப்பாக நடந்துகொண்டே வருவதால்தான், அவர் தலைமையை எதிர்க்கிறோம். முக்கியமான கொள்கை பற்றிய விடயங்களில், தம்மைப் பின்பற்றும் பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவைப் பெற முடியாதவராகவோ பெறச் சக்தியற்றவராகவோ, உள்ள ஒருவர், தம்மைக் கட்சித் தலைவர் என்று கூறிக்கொள்ள முடியாது; கூறிக்கொண்டால், அதை எவரும் ஏற்கவும் மாட்டார்கள்.

ஒரு கட்சியின் தலைவராக உள்ளவர், தமது சக உறுப்பினர்களின் கருத்துகளுக்கு மதிப்பு வைத்து, அதை நல்ல முறையில் ஆராய்ந்து, அதைச் செயலும் படுத்தினால்தான் கட்சி உறுப்பினர்களின் ஒருமித்த கருத்தைப் பிரதிபலிக்கும் தலைவர் என்ற தகுதியைப் பெறமுடியும். அப்படிச் செய்யும் ஒரு தலைவர் தான், தம்மை எல்லா வகையிலும் தகுதியான தலைவர் என்று நிரூபித்துக் காட்டிக்கொள்ளவும் முடியும். அந்நிலையில்தான் கட்சியின் நம்பிக்கை அத்தலைவரைக் கவிந்து காத்து நிற்கவும் செய்யும். அந்தத் தலைமைக்குத்தான் நிரந்தர சக்தியும் உண்டு.

• • •

தன் கருத்துக்கு மேல் எதுவுமே இல்லை; அதுவே நிகரற்றது என்ற தன்மையும், பிறர் கருத்துக்களைப் புறம்போக்கில் தள்ளிவிடும் தன்மையும், ஜனநாயக அமைப்பை அனுசுவே முடியாது.

இம்மாதிரி தன்மை கொண்ட ஒரு தலைவர், மிக மிகத் திறமைசாலியாகவும், வலிமை வாய்ந்தவராகவும் இருக்கலாம்.

இவர், தனது திறமை—வலிமையின் அடிப்படையிலேதான் தமது தலைமை செயல்படுகிறது என்று நிச்சயித்தால், இவர் தமது சக உறுப்பினர்களை அனுசரிக்கவே தேவையில்லை. அப்படி ஒரு நிலையில், அவருடைய தலைமை, வேறற்ற ஒன்றாக அமைவு கண்டு நிற்குமேயன்றி நிலைத்த சக்தியோடு நீண்டகாலம் நீடிக்க முடியாது.

* * *

ஆச்சாரியார், சென்னை முதல் அமைச்சராக இருப்பது ஜனநாயக வரம்புக்குச் சரியான அதரவா, என்று கேரு பதிலனுப்பியிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஒரு நியமன உறுப்பினரோ, மக்களால் தேர்ந்தெடுக்கப்படாதவரோ ஒரு மாகாண ஆட்சித் தலைவராக இருப்பதை நமது அரசியல் சட்டம் அனுமதிக்கவில்லை. ஆனால், அத்தகைய உறுப்பினர், பதவி ஏற்ற ஆறு மாதங்களில் தேர்தலில் நின்று வெற்றி பெறாது தலைமையைத் தொடர அரசியல் சட்டம் மறுக்கவில்லை.

ஆச்சாரியார் தேர்தலில் நிற்க ஒரு வாய்ப்பளிக்க, ஒரு தொகுதியும் குறிப்பிடப்பட்டது. ஆனால் அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார். காரணம், தோற்றுவிடும் என்பதல்ல; தேர்தல் முறையின் மீதே அவருக்கு நம்பிக்கையோ பற்றோ இல்லை என்பதே காரணம்!

• • •

ஆச்சாரியார், சென்னை மேல்சபை உறுப்பினரானதே, இந்தியத் தலைமை அமைச்சர் நேருவையோ அன்றி, ஜனாதிபதியையோ முன்னதாகப்போடு அனுமதி பெறாமல், கவர்னர் நியமனத்தின் பேரில்தான் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

குறிப்பாக இப்பிரச்சினை தற்போது கொழுந்துவிட்டதற்கு ஆந்திரப் பிரச்சினைதான், கரு!

இப்பிரச்சினை ஏன் எழுப்பப்பட்டிருக்கிறது என்பதை, கட்சியின் மூலம் ஆராய்ந்து முடிவு கட்டி, நியாயத்தை அனுசரிக்க வேண்டியதுதான் முறை. ஆனால், இங்கு நடப்பது விசித்திரமாகவும் விபரீதமாகவும் இருக்கிறது.

ஆச்சாரியாரின் தலைமையை எதிர்த்து நேருவுக்குப் பலர் கையெழுத்திட்டு மனுப் போட்டிருப்பது, நியாயத்தின் அடிப்படையின அன்றி, வெறும் பொறுமையின் அடிப்படையிலா என்பதை ஆராயாமல், கையெழுத்துப் போட்டு மனு அனுப்பிய மக்கள் பிரதிநிதிகளை, வேண்டுமென்றே குற்றஞ்சாட்டி, அவர்களை மக்கள் தொடர்பிலிருந்து தனிப்படுத்தும் முயற்சி நடைபெறுகிறது. இம்முயற்சியின் மூலம் ஜனநாயகம் செம்மையாய்ச் செயல்படுமென்று நான் நினைக்கவில்லை. இம்முயற்சி நல்ல எதிர்காலத்தின் முன்னறிவிப்புமல்ல. இது ஜனநாயகச் செயல்களுக்குத்தான் இடைஞ்சல்.

• • •

சுதந்திரமாகவும், திறமையாகவும் விவாதித்து, மொத்தமான தீர்ப்புதான் ஜனநாயகத்தின் தேவையும் முக்கியமும். ஆனால் ஆச்சாரியாரைப் பொறுத்த வரை, ஜனநாயகம் இருக்கும் இடத்தையே தெரிந்துகொள்ள முடியவில்லை.

கட்சியின் தலைவராக இருப்பவர், ஜனநாயகத்தின் மீது பற்றுள்ளவராக இருந்தால், முக்கியமான கொள்கைகளை வகுக்கும் போதாவது, தனக்கும் கட்சி சார்பு என்று ஒன்று இருக்கிறதே அதற்கு உறுப்பினர்களும் இருக்கிறார்களே என்பதை மறக்காமல், பெயருக்காகவாவது கட்சி உறுப்பினர்களைக் கலந்து கொள்ளவேண்டும். அதுதான் ஜனநாயக வரம்புமாகும். தன் கட்சி உறுப்பினர்களின் ஆதரவாலதான் தாம் தலைமை வகிக்கிறோம் என்பதற்குச் செய்யும் நன்றியுமாகும். ஆனால், இவ்வகையில், ஆச்சாரியாரின் போக்கே தனியாக உள்ளது.

அவர், ஜனநாயகத்தின் பெயரால் வகுத்துக்கொண்டுள்ள வழியும், உண்மையான ஜனநாயகத்துக்குள்ள வழியும் ஒன்றோடொன்று தொடர்பில்லாதவை.

ஜனநாயகத்தோடு முரண்படுவது—அதன் மூலம் தாம் செய்யும் செயல்கள்மீது ஆதங்கத்தை கொள்வது—எடுத்ததற்கெல்லாம் குறை கூறுவது-இவைகள் மூலம் மகிழ்ச்சி கொள்வது—இதெல்லாம் ஆச்சாரியாரின் தன்மைகள்.

இதுபோக, தன் கருத்துதான் அனைத்திற்குமே மேலானது — முடிவானது என்று தாமே நிச்சயித்து, அதைப் பிறர்மீது திணிப்பது—தமது அறிவுக்கு நிகராக ஒருவருமில்லை என்று தமக்குத் தாமே நினைத்துக்கொண்டு, அந்த நபரை அவமதிப்பது-தமது கருத்துக்கு இணங்கி வாராதவர்களை வெறுத்து ஒதுக்கி விடுவது—தமது கருத்துக்கள் அவ்வளவிற்கும் சரி சொல்லத் தயங்குவோரைப் பகைத்துக் கொள்வது — தமக்குக் கீழ்ப்படிந்து, தம்மைச் சுற்றி நிற்போரைப் புகழ்வது, ஆசரிப்பது இதெல்லாம் ஜனநாயக உணர்ச்சிக்கு மிக மிக வேறுபட்டவை. ஆனால், ஆச்சாரியாரின் நடவடிக்கை இந்த முறையில் தான் செல்லுகிறது.

இம்மாதிரி, ஜனநாயகத்துக்கு முரணான செயல்களைக் கொஞ்சமும் யோசியாமல் செய்வதாலேயே ஆச்சாரியாரின் நிறனுக்குரிய கூர் மழுங்கி, அவரை ஜனநாயகத்தின் ஒருமித்த தலைமைக்குத் தகுதியற்றவராகச் செய்துவிடுகிறது.

• • •

பண்டித நேருவுக்கு மனுப் போட்டவர்களெல்லாரும் ஏராளமான ஆட்கள் அல்ல. அவர்கள் அனைவரும் ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள—சொந்தப் பகைமையுணர்ச்சி எதுவுமற்ற மக்களின் பிரதிநிதிகள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சிக்கல் தற்போது, இதரப் பிரச்சினைகளைவிட முற்றி வளர்ந்து நிற்கிறது. எனவே, ஆச்சாரியார் கட்சிக் கூட்டத்தைக் காலம் தாழ்த்தாமல் கூட்டி, சட்ட சபையின் மறுகூட்டம் கூடுமுன் தகராறைத்தவிர்த்துக் கொள்ளுவாரென நம்புகிறேன்.

—த. நா.'

## 1) கோடி பேர்களுக்கு வேலை கிடைக்கத் திட்டம்

பம்பாய், நவ. 3—

கிராமப் பகுதிகளில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துக் கட்ட அகில இந்திய கிராமக் கைத்தொழில் போர்டு ஒரு திட்டத்தை வகுத்துள்ளது.

கிராமாந்தரப் பகுதிகளில் வேலையில்லாமல் திண்டாடுபவர்களின் எண்ணிக்கை 4,05,00,000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

கிராமக் கைத்தொழில் போர்டின் சிபார்சுகளை ஏற்றால், இன்னும் 5 ஆண்டுகளில் 10 கோடி பேர்களுக்கு வேலை கிடைக்கும்படி செய்ய முடியும் என்று அப்போர்டு கூறுகிறது.

### காண்டா மிருகங்களுக்கு ஆபத்து

தார்—இஸ்—சலாம் நவ. 3—

ஆப்பிரிக்காவில், தென்தங்கனிகோவில் வசிக்கும் நூற்றுக் கணக்கான காண்டா மிருகங்கள், மழையில்லாத காரணத்தால், சாகும் தருவாயிலிருக்கின்றன.

## கழகக் கூட்டங்கள்

★

### புதுப்பட்டி

(மதுரை மாவட்டம்)

5—11—53 வியாழன் மாலை

தலைவர்: எஸ். அப்பாதுரை

பேசுவோர்:

ஏ. கோவிந்தசாமி
எஸ். முத்து
எம். ரத்தினம்

★

### சீர்காழி

5—11—53 வியாழன் மாலை

சி. பி. சிற்றரசு பேசுவார்

★

### அன்னதானப்பட்டி

5—11—53 வியாழன் மாலை

தலைவர்: ஈ. ஆர். கிருஷ்ணன்

பேசுவோர்:

வி. சிவப்பிரகாசம்
கவிஞர் கண்ணதாசன்
என். இரத்தினம்
கே. ஏ. நடராசன்

தோழர்

### ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.

சுற்றுப்பயணம்

5—11—53 புதுப்பட்டி (கம்பம்)
6—11—53 காங்கேயம் (தேர்தல் பிரச்சாரம்)
7—11—53 இராசிபுரம்
8—11—53 பெங்களூர்

# ஏரியைப் பகைத்துக் கொண்டு?

பாட்னா, நவ. 1—

"அவசியமானால்: நான் பல்கலைக் கழகங்களை மூடி, அவை களின் கதவுகளைச் சாத்திவிடுவேன்."

"தேவைப்பட்டால், நான் புதிய பல்கலைக் கழகங்களைத் தொடங்குவேன்; கல்வி முறையில் மாறுதல் செய்வேன்; மகாத்மா காந்தி ஆதரித்த அடிப்படைக் கல்விக்கு, நான் முதலிடம் தருகிறேன் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்."

—இவ்வாறு, அனைக் கண்டத்து முதலமைச்சர் பண்டித நேரு பாட்னாவில், லட்சுமணபுரி மாணவர்களின் ஆர்ப்பாட்டம் குறித்துப் பேசுகையில் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், குறிப்பிட்டதாவது:—

"இலட்சுமணபுரியிலும், அலகாபாத்திலும் மாணவர்கள் நடந்து கொண்ட முறைகளைக் கண்டிக்கிறேன். நான் இதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. படிப்பதற்காக பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பப்படும் மாணவர்கள், இம்மாதிரி ஒழுங்கற்ற முறையில் நடந்து கொண்டால், எதற்காக அவர்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டும்?

"எதற்கெடுத்தாலும் பட்டினிப் போரைக் கையாளுவதென்பது இப்பொழுது ஒரு நாகரீகம் ஆகிவிட்டது. இது ஒரு கேலிக்கூத்தாகப் போய்விட்டது. இம்மாணவர்களின் நடத்தை வன்மையாகக் கண்டிக்கப்பட்டத் தக்கதாகும்."

### சீனாவில் இந்தியக் கவிஞர்

ஹாங்காங், நவ. 3—

சீனாவில் சுற்றுப் பிரயாணம் செய்துவரும் இந்தியக் கவிஞர் ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயா, காண்டின் வந்தபோது, அவருக்கு ஸ்டேஷனில் இலக்கிய, கலை வல்லுனர்கள் வரவேற்பு அளித்தனர். சீனத் தலைநகரான பீகிங்குக்கு விஜயம் செய்தபோதும் பல சங்கங்கள் சார்பில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, ஜோதிநாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: ம. கண்ணப்பதுரை, எம். ஏ.